UNIVERSITY OF PERADENIYA
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
දූරස්ථ හා අධ්‍යාපන කේන්ද්‍රය අඛණ්ඩ

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2015

அரசியல் சமூகக் கோட்பாடுகள் (PSG I)
Political Science (PSG I)

எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்
இவ்வினாத்தாளில் மொத்தம் 10 வினாக்கள் உள்ளன
எவையேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடை எழுதவும்
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள் மட்டும்

---

1. “அரிஸ்டோடலினுடைய அரசாங்கம் பற்றிய வகைப்பாடு தரமான ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருக்கின்ற நபர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது” கருத்துரைக்க.

2. “ரூஸோவால் வழங்கப்பட்ட சமூக ஒப்பந்தமானது முற்றிலுமாக லொக்கினதிலிருந்து வேறுபட்டது” நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

3. இறைமை தொடர்பான ஜோன் ஒஸ்டினுடைய கருத்துக்களை விமர்சனரீதியாக பரிசீலிக்குக.

4. “சுதந்திரமற்ற சமத்துவம் அல்லது சமத்துவமற்ற சுதந்திரம் அர்த்தமற்றது” இக்கூற்றை விமர்சனரீதியாக பரிசீலிக்குக.

5. 
   1. தாராண்மைவாதம் என்பதில் இருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
   2. மரபுரீதியான தாராண்மைவாதத்திற்கும் நவீன தாராண்மைவாதத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை அடையாளப்படுத்துக.

6. கால்மாக்சினால் வழங்கப்பட்ட வர்க்க முரண்பாடு மற்றும் மிகைமதிப்புக் கோட்பாடு தொடர்பாக ஒரு விமர்சனக் கட்டுரை எழுதுக.

7. “பாசிசம் ஜனநாயகத்திற்கும் தாராண்மைவாதத்திற்கும் தனிமனிதவாதத்திற்கும் எதிரான ஒரு எதிர்வினையாக (reaction) இருக்கிறது” நீர் ஏற்றுக்கொள்கின்றீரா ? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

ம.ப.பா

8. மொண்டஸ்கியூ "ஒரு நபரிடத்தில் அல்லது ஒரு ஒழுங்கமைப்பில் அதிகாரம் குவிந்திருப்பதானது தனிமனித சுதந்திரத்தை குறைத்து சர்வதிகாரத்திற்கு வழிவகுக்கும்" என குறிப்பிடுகின்றார். நவீன அரசுகள் தொடர்பாக இது எந்தளவிற்கு உண்மையானது?

9. மனித உரிமைகளோடு தொடர்புடைய பின்வரும் கோட்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

1. வரலாற்றுக் கோட்பாடு
2. சட்டக் கோட்பாடு
3. இயற்கைக் கோட்பாடு
4. இலட்சியக் கோட்பாடு

10. பின்வருவனவற்றுள் **ஏதாவது இரண்டு** பற்றி சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

1. கில்டு சோசலிசம்
2. கால்மாக்சினுடைய இயக்கவியல் பொருள்முதல்வாதம்
3. பிளேடோவினுடைய குடியரசு
4. கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம்
5. சமத்துவமும் சம அந்தஸ்தும் (Equality and Equity)

UNIVERSITY OF PERADENIYA
பேராதனைப் பல்கலைக்கழகம்

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
தொடர் தொலைக்கல்வி நிலையம்

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
பொதுக் கலைத் தேர்வு(வெளிவாரி) 2015

அரசியல் விஞ்ஞானம் Political Science (PSG: II)
**இலங்கை அரசாங்கம்**

அனைத்து வினாக்களும் சமமான புள்ளிகளைக் கொண்டுள்ளன.
இவ்வினாப் பத்திரத்தில் மொத்தம் 10 வினாக்கள் உள்ளன.
ஏதேனும் 05 வினாக்களுக்கு விடை தருக.
கையெழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
நேரம்: **மூன்று(03)** மணித்தியாலங்கள் மட்டும்

---

(01) ‘‘இலங்கைத் தேசிய இயக்கம் அடிப்படையில் ஓர் மத்தியதர வர்க்க இயக்கமாகும்’’. இக்கூற்றுடன் நீர் உடன்படுவீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

(02) பின்வருபனவற்றுள் **ஏதேனும் ஒன்றின்** தாக்கத்தைப் பரிசீலிக்குக.

i) கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம்
ii) 1931 இல் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை

(03) சோல்பரி யாப்பில் இடம்பெற்ற சிறுபான்மையோர் காப்பீடுகளின் தாக்கரத் தன்மையைப் பரிசீலிக்குக.

(04) சோல்பரி யாப்பில் இடம்பெற்ற பின்வரும் நிறுவனங்களின் யாப்புசார் நிலையை 1972 யாப்பில் இடம்பெற்ற அவற்றின் ஒத்த நிறுவனங்களோடு ஒப்பிட்டு வேறுபடுத்துக.

i) நாம நிர்வாகி

ii) சட்டத்துறை

(05) இலங்கையில் செயற்றிறன்மிக்க எதிர்க்கட்சி வளர்ச்சியடைதற்கு தடையாகவுள்ள காரணிகளைப் பரிசீலிக்குக.

(06) இலங்கையில் 1972 மற்றும் 1978 யாப்புக்களில் இடம்பெற்ற அடிப்படை உரிமைகள் ஏற்பாடுகளை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

ம.ப.பா

(07) 1978 யாப்பு அறிமுகஞ் செய்த பிரதிநிதித்துவ முறையின் பிரதான குறைபாடுகளை ஆராய்க.

(08) 1978 யாப்புக்கான 19வது திருத்தத்தின் பின்னர் இலங்கை ஜனாதிபதியின் நிலை,அதிகாரம் மற்றும் பணிகளை நுணுக்கமாக பரிசீலிக்குக.

(09) 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் உருவாக்கம் இலங்கை வெஸ்ற்மின்ஸ்டர் மாதிரி பாராளுமன்ற அரசாங்கத்திலிருந்து மிகத் தெளிவாக விலகிச் செல்வதை குறித்து நிற்கின்றது எனும் கருத்தோடு நீர் உடன்படுவீரா?

(10) பின்வருபனவற்றுள் **ஏதேனும் இரண்டிற்கு** சிறு குறிப்புகள் எழுதுக.

i) 2015இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்

ii) 1948 சோல்பரி யாப்பின் கீழ் மகா தேசாதிபதி

iii) டொனமூர் யாப்பின் கீழ் நிர்வாகக் குழு முறைமையின் செயற்பாடு

iv) இலங்கையில் நீதித்துறை சுதந்திரம்

UNIVERSITY OF PERADENIYA
පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය

CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION
දූරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය

GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - AUGUST 2015
ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2015

அரசறிவியல் (PSG III) Political Science (PSG III)

## பொதுத்துறை நிர்வாகம்

எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்
இவ்வினாத்தாளில் மொத்தம் 10 வினாக்கள் உள்ளன
எவையேனும் 05 வினாக்களுக்கு விடை எழுதவும்
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள் மட்டும்

---

01. பொதுத்துறை நிர்வாகத்தை வரைவிலக்கணஞ் செய்து பொதுத்துறை நிர்வாகத்துக்கும் தனியார் நிர்வாகத்துக்கும் இடையிலான வேறுபாட்டைத் துணிக.

02. ‘‘பொதுத்துறை நிர்வாகம் அரசியல் சூழலிலேயே பிழைத்து நிற்க முடியும்’’. ஆராய்க.

03. பின்வருபனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து சுருக்கக் கட்டுரை வரைக.

அ. பொது நிர்வாக கற்கைக்கான சமூகவியல் அணுகுமுறை

ஆ. பொதுத்துறை நிர்வாகத்தின் கலையும் விஞ்ஞானமும்

இ. கட்டுப்பாட்டு எல்லைக் கோட்பாட்டின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள்

04. ஒழுங்கமைப்புக் கோட்பாட்டிற்கு எல்டன் மாயோ வழங்கிய பங்களிப்பை நுணுக்கமாக பரிசீலிக்குக.

05. மெக்ஸ் வெபரின் ‘‘இலட்சிய மாதிரி பணியகவமைப்பின்’’ பிரதான பண்புகளை விபரித்து நவீன நிர்வாக அமைப்பில் அதன் நடைமுறைச் சாத்தியத்தைப் பரிசீலிக்குக.

06. ‘‘பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகம் இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மிகவும் பொருத்தமிக்க பொறிமுறையாக உள்ளது’’. நீர் உடன்படுவீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

07. அமெரிக்க சிவில் சேவையின் பிரதான பண்புகளை விளக்குக.

08. ‘‘1854 நோர்த் கோற் ட்ரவல்யன் ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் மானிய முறைமைக்குப் பொருந்தும் வகையில் அமையப்பெற்ற பிரித்தானிய சிவில் சேவையை முதலாளித்துவத்தின் தேவைகளை நிறைவு செய்யத்தக்கதாக மறுசீரமைப்பதாகும்’’. பரிசீலிக்குக.

ம.ப.பா

09. இலங்கையில் மாகாண சபை முறைமையின் அனுகூலங்கள் மற்று குறித்து நுணுக்கக் கட்டுரை ஒன்று வரைக.

10. பின்வருபனவற்றுள் **எவையேனும் இரண்டிற்கு** சிறு குறிப்புகள் வ

அ). பிரான்சிய சிவில் சேவையில் உயர் தேசிய சபை(C

ஆ). இலங்கையில் பிரதேச சபை முறைமை

இ). 1978 யாப்பிற்கான 19வது திருத்தமும் சுயாதீன ஆ

ஈ). இந்தியாவில் பஞ்சாயத்து சமித்தியும்(Samiti) பங்கே